4. அறிவிப்புகள் (தொடர்ச்சி)

(அ) நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு தமிழ்நாடு 1981 (ஆ. இ)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு 1981–ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன் வடிவை பேரவையில் அறிமுகம் செய்யவும், ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்கள்.

3. அரசினர் சட்ட முன்வடிவுகள் (தொடர்ச்சி)

ஆ. நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவு, தமிழ்நாடு, 1981.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிதி ஒதுக்க (எண் 4) சட்ட முன்வடிவை பேரவை முன் அறிமுகம் செய்ய அனுமதி கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப் பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்: இச்சட்ட முன் வடிவை பேரவை முன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

6. தகவல் கோரல்

வேதாரண்யம் கரையோரம் பத்து பிணங்கள் ஒதுங்கி இருப்பதாகக் வந்துள்ள செய்தி.

*திரு. க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நந்த விவாதத்திலே நான் பங்கெடுத்துக் கொள்ளாவிட்டாலும் கூட இன்று காலையிலே எதிர்க்கட்சித் தலைவர் அவர்களுக்குக் கிடைத்திருக்கின்ற தந்தியிலே ஒரு அதிர்ச்சியான வருந்தத்தக்க செய்தி வந்திருக்கின்றது. அதை அரசினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் காரணம் முன்னவர் அவர்கள் அதை கவனிக்க வேண்டும் என்பதற்காகத் தான். இந்தத் தந்தியினை வேதாரண்யத்திலே இருந்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. மீனாட்சிசுந்தரம் அவர்கள் அனுப்பி இருக்கிறார்கள்.

"About 16 dead bodies of assassinated Tamillians of Ceylon ashored in vedararyam to Point Calemere sea shore. என்று இந்தத் தந்தியிலே காணப்படுகிறது. இலங்கையிலே வாழ்கிற தமிழர்களிலே 10 பேர் கொலை செய்யப்பட்டு அவர்களுடைய உடல்கள்

வேதாரண்யத்திலே பாயின்ட் காலிமர் என்ற அந்தக் கடற் கரைப் பகுதியிலே ஒதுங்கி இருக்கிறது என்ற செய்தியினைத் தந்தியிலே கொடுத்திருக்கிறார்கள். இது மிகவும் வருந்தத் தக்க செய்தி. அப்படிப்பட்ட நிலைமை இருக்குமேயானால், அது உண்மையாக இருந்தால் அதுபற்றி உடனடியாக அரசு கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டு இந்தச் செய்தியினை முன்னவர் அவர்களின் கவனத்திற்குத் தங்கள் மூலமாக நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் காலை நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்று மீண்டும் சரியாக மாலை 4.00 மணிக்குக் கூடும்.

பின்னர் பேரவை பிற்பகல் 1-02 மணிக்கு ஒத்தி வைக்கப் பெற்றது.

மாலை 4 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. பி. எச். பாண்டியன் அவர்கள் தலைமையில் பேரவை மீண்டும் கூடியது.

4. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

இ. மேலவைத் தலைவரிடமிருந்து வந்துள்ள செய்தி.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்ற மேலவையில் கீழ்க்கண்ட சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவுகள் திருத்தம் ஏதுமின்றி நிறை வேற்றப்பட்டதாக மாண்புமிகு மேலவைத் தலைவரிடமிருந்து செய்தி வரப்பெற்றுள்ளது.

1. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நிலச் சீர்திருத்தங்கள் (நில உச்ச வரம்பு கட்டுதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 56/1981).

2. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) திருத்தச் சட்ட முன்வடிவு (சட்ட மன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 57/1981).

3. தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு நகர்ப்புற நில (உச்ச வரம்பு, முறைப்படுத்துதல்) இரண்டாம் திருத்தச் சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண். 58/1981).

3. அரசினர் சட்ட முன்வடிவுகள்—தொடர்ச்சி

இ. மதுவிலக்கு (இரண்டாம் திருத்தச்) சட்ட முன்வடிவு.

திரு. அ. ரகுமான்கான்: துணைத் தலைவர் அவர்களே, "21—5—1981 ஆம் தேதியன்று ஆளுநர் அவர்கள் பிறப்பித்துள்ள தமிழ்நாடு 1981 ஆம் ஆண்டு மதுவிலக்கு (இரண்டாம் திருத்த) அவசரச் சட்டத்தை (தமிழ்நாடு அவசரச் சட்டம் எண். 3/1981) இப்பேரவை நிராகரிக்கிறது" என்று மொழிகிறேன்.